OS No.395/2018

PW–1 –சண்முகம்

த/பெ.

நாள். 29.10.2025

பிரதிவாதி–9 (இறப்பு)

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி–15, 16 தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1.நான் ஏழாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நகை கடைக்கு வேலைக்கு போகிறேன். தாவா சொத்து வானம் பார்த்த மானாவாரி பூமி என்றால் ஆமாம். 2013–ல் தான் நான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்று சொன்னால் சரிதான் அந்த சமயத்தில் வில்லங்கம் போட்டு பார்த்த வில்லங்க சான்றிதழ் என் கைவசம் தான் இருக்கிறது என்றும் சொன்னால் இருக்கிறது. அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கம் செய்யவில்லை என்றால் ஆமாம்.

2.தாவா சொத்தை பெரியசாமி வாரிசுகளிடம் இருந்துதான் வாங்கினேன் என்றால் ஆமாம். 2013–ல் தான் நான் சொத்தை வாங்கி இருக்கிறேன் என்ற போதில் 2012 மற்றும் அதற்கு முன்பு இருந்த விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது. ஒன்பதாம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் 1979 ஆம் ஆண்டு கிரைய ஆவணத்தின் படி பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் இருக்கலாம். அந்த சொத்தில் ஒன்பதாம் பிரதிவாதி விவசாயம் செய்து வந்தார் என்று சொன்னால் தெரியாது.

3.1994 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கந்தசாமி, மருதாசலம் மற்றும் சரஸ்வதி ஆகியோர் தாவா பூமியை கிரையம் பேசி அதில் ஒன்பதாம் பிரதிவாதிக்கு ஏற்கனவே கொடுத்து விட்டார்கள் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதன் பின்பு ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள் என்றும் சொன்னால் எனக்கு தெரியாது.

ஒன்பதாம் பிரதிவாதியானவர் கிரயத்தை பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டபோதிலும் பூமியை தாங்கள் சைட் போட்டு விற்பனை செய்யப் போவதால் அதனை தற்போது பதிவு செய்ய வேண்டாம் என்று மேற்சொன்ன மருதாசலம்,

சரஸ்வதி மற்றும் கந்தசாமி ஆகியோர் மறுத்துவிட்டார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

4.ஒன்பதாம் பிரதிவாதிக்கு மேற் சொன்ன மருதாச்சலம், சரஸ்வதி மற்றும் கந்தசாமி ஆகியோர் யார் யாருக்கு சைட் போட்டு விற்றார்கள் என்ற விவரம் எதுவும் தெரியாது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு விற்பனை செய்த விவரமே உன்ன தான் பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் அதுவும் எனக்கு தெரியாது.

5.எனக்கு விற்பனை செய்த பெரியசாமி வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வில்லை என்றால் இல்லை. விட்டு மனை விற்பனை செய்ய மருதாச்சலம், சரஸ்வதி மற்றும் கந்தசாமி தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். ஏற்கனவே 2013 ஆம் ஆண்டு நான் கிரயம் வாங்குவதற்கு முன்பே இந்த சொத்தில் வில்லங்கம் இருக்கும் விவரம் எனக்கு தெரிந்திருந்தும் இந்த சொத்தை நான் விலைக்கு வாங்கி இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்கு போடும்போது ஒரு சென்ட் என்பது ரூபாய் 4 லட்சம் தோராயமாக இருக்கும். உரிய தரப்பினர்களை வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.